தினமணி

நிகழாண்டு 150 விவசாயிகளுக்குப் பயிற்சி: ஆட்சியர்

First Published : 14 Aug 2010 12:59:54 PM IST

பெரம்பலூர், ஆக. 13: பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டு 150 விவசாயிகளுக்குப் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆத்மா திட்டத்தின் 4-வது ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்கேற்று ஆட்சியர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆத்மா திட்டம், செம்மை நெல் சாகுபடி திட்டம், நீர்வள- நிலவளத் திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதால், அனைத்து மாவட்டங்களுக்கும் முன்னோடி மாவட்டமாக பெரம்பலூர் திகழ்கிறது.

நிகழாண்டில் விவசாயிகளுக்கு துல்லியப் பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், நவீன வேளாண் கருவிகள் போன்ற தலைப்புகளில் 150 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் விவசாயிகள் பங்கேற்று, தற்போதைய காலக்கட்டத்துக்கு ஏற்றவாறு நவீன முறைகளைப் பயன்படுத்தி அதிக லாபம் பெற வேண்டும்.

மேலும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி லாபம் ஈட்டிய விவசாயிகள் மூலம், பயிற்சி வகுப்புகள் நடத்த 10 பண்ணைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மழை பெய்யும் காலங்களில், நீரைச் சேமிக்க விவசாயிகள் பண்ணைக் குட்டைகள் அமைக்க வேளாண்மைத் துறை ஊக்கப்படுத்த வேண்டும். இதனால், நீர்வளம் பெருகி, விவசாயம் செழிப்படையும்.

எனவே, விவசாயிகளுக்காக அனைத்துத் துறை அலுவலர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார் அவர்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சு. பழனிசாமி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சிவக்குமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ராஜராஜசோழன், பொறியியல் துறை செயற்பொறியாளர் மணி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஜோதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன், ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, விவசாயப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பண்ணைக்குட்டைகள் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

First Published : 14 Aug 2010 01:01:34 PM IST

அரியலூர், ஆக. 13: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார், அரியலூர் மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தும் வகையில், அரியலூர் ஒன்றியத்தில் 10 பண்ணைக் குட்டைகள், ஒரு கிராமக் குளம் அமைக்க அரசாணை வரப்பெள்ளது. அதனடிப்படையில், விவசாயிகள் வயல்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க தலா ரூ.50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள அரியலூர் ஒன்றிய விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேலும், இதுதொடர்பான கூடுதல் விவரம் பெற, உதவி செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, பண்டகசாலை வளாகம், ஜயங்கொண்டம் சாலை, அரியலூர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

இதேபோல, பெரம்பலூர் மாவட்டத்தில் 9 பெரிய தடுப்பணைகள், 7 நடுத்தர தடுப்பணைகள், 4 பண்ணைக் குட்டைகள் அமைக்க அரசாணை வரப் பெற்றுள்ளது.

இதுதொடர்பான கூடுதல் விவரம் பெற, உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 158 புதுக் காலனி, வடக்குத் தெரு, துறைமங்கலம், பெரம்பலூர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு, அதற்கான விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். இவ்வாறு அவர்கள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்

தினமலர்

**50 சதவீத மானியத்தில் காய்கறி, கீரை விதைகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,03:11 IST

வாலாஜாபாத்:வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில், காய்கறி மற்றும் கீரை விதைகள் இருப்பு உள்ளன.காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஆடி பட்டத்தில் பயிரிடப்படும் தோட்டக்கலை பயிர்களான கத்தரிக்காய், பாகல், சுரைக்காய், கீரை விதைகள் போதிய அளவு இருப்பு உள்ளன.இது தவிர, பழச் செடிகள் கொய்யா, சப்போட்டா, மா போன்றவை

வாலாஜாபாத் வட்டார விரிவாக்க மையத்தில் இருப்பு உள்ளன. 50 சதவீத மானியத்தில் செடி மற்றும் விதைகள் பெற விரும்பும் விவசாயிகள், வாலாஜாபாத் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகலாம் என, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் ராமசாமி தெரிவித்தார்.

**பண்ணையம் அமைக்க மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,01:13 IST

காரைக்குடி: வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன் அறிக்கை: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், சாக் கோட்டை வட்டாரத்தில் துல்லிய பண்ணையம் அமைக்க, மானியம் வழங் கப்படுகிறது. கரும்பு, நிலக்கடலை, மக்காச் சோளம் பயிரிடும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். பண்ணையம் அமைக்க குறைந்தது ஒரு எக்டேர் நிலம், தண்ணீர் வசதி வேண்டும். சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு 11, 200 ரூபாய்; உரத்திற்கு 7500 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள், உதவி வேளாண் அலுவலர்களை சந்தித்து பதிவு செய்து கொள்ளலாம். இந்த ஆண்டிற்கான பூச்சி கண்காணிப்பு திடல், சாக்கோட்டை, பிரம்புவயல் கிராமங்களில் அமைக்க முடிவு செய்யப் பட்டுள்ளது. வாரந்தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட வயல்களில் பூச்சி கணிப்பு செய்து ஆலோசனை வழங்கப்படும் என்றார்.

**நேரடி நெல் விதைப்பிற்கு தொழில்நுட்ப ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,01:08 IST

சிவகங்கை: சிவகங்கை, இளையான்குடி, தேவகோட்டை விவசாயிகள், நேரடி நெல் விதைப்பிற்கான தொழில் நுட்ப ஆலோசனையை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாய இணை இயக்குனர் தங்கச்சாமி பாண்டியன் கூறியதாவது: ஏக்கருக்கு 40 கிலோ நெல் விதையை ஒரு சத பொட்டாசியம் உரக்கரைசலில் 20 மணி நேரம் ஊற வைத்து பின், நீரை வடித்து உலர வைக்கவும். விதையை ஒரு மாதம் வைத்து விதைக்கலாம். ஒரு கிலோ விதையுடன் 10 கிராம் சூடோமோனாஸ் அல்லது 2 கிராம் கார்பண்டாசிம் கலந்து 24 மணி நேரம் வைத்து பின் விதைக்கவும். உயிர் உரங்கள் மண்ணின் வளத்தை அதிகரிப்பதோடு பயிருக்கு தேவையான சத்துக்களை கிரகிக்கும். பயிர்கள் வறட்சியை தாங்கி வளரும், ஏக்கருக்கு ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம், ஒரு பாக்கெட் பாஸ்போபேக்டிரியாவை 100 மில்லி ஆறிய வடிகஞ்சியில் கலந்து, கலவையை ஒரு ஏக்கர் விதையுடன் கலந்து, உலர்த்தவும். மானாவாரி நெல் விதைப்பில் அடியுரம் இடுவதில்லை. இளம்பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்காது. இக்குறையை தவிர்க்க மண்வள அட்டை பரிந்துரைப்படி தொழுஉரத்தை விதைப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் தயாரித்து,

நெல் விதைப்பு செய்யும் போது வயலில் இடவேண்டும். 300 கிலோ தொழு உரத்துடன் 60 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ பொட்டாஷ் உரம் கலந்து குவியலாக வைக்கவும் என்றார்.

**வெங்காயம் விலை வீழ்ச்சி; கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,04:07 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுகா பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயம், திடீர் விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணராயபுரம் சுற்றியுள்ள பஞ்சப்பட்டி, சிவாயம், வயலூர், புதுப்பட்டி, லட்சுமணப்பட்டி, பெரியபாளையம் பகுதிகளில் பரவலாக வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போதைய சீசனில் வெங்காயம் சிறப்பாக விளைச்சல் கண்டுள்ளது. அதே சமயம், வெங்காயத்தின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கிலோவுக்கு 10 முதல் 15 ரூபாய் மட்டுமே மொத்த வியாபாரிகளிடம் இருந்து விவசாயிக்கு கிடைக்கிறது. "விலை மலிவாகும் காலத்தில், கூடுதல் விளைச்சல் காணும் வெங்காயத்தை பாதுகாத்து வைக்க தேவையான ஏற்பாடு இல்லாத காரணத்தினால், கிடைக்கும் விலைக்கு நஷ்டமானாலும் விற்பனை செய்ய வேண்டியுள்ளது' என்று விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர்.

**விவசாயிகள் விளைபொருளுக்குகூடுதல் விலை பெற வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,03:25 IST

அன்னூர்: "விவசாயிகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் விளைபொருட்களுக்கு கூடுதல் விலை பெறலாம்' என, வேளாண் இணை இயக்குனர் தெரிவித்தார். அன்னூர் பகுதியில், 74 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் 27 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது. 60 சதவீதம் மானாவாரியாக பயிர் செய்யப்படுகிறது. பருவ மழை சரியாக பெய்யாதது, நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவது, விவசாய தொழிலாளர் பற்றாக்குறை, கூலி உயர்வு, நிலையில்லாத விளைபொருள் விலை ஆகிய காரணங்களால் விவசாயப்பரப்பு குறைந்து வருகிறது.
விவசாய பரப்பை அதிகரிக்கவும், உற்பத்திதிறனை மேம்படுத்தவும் வேளாண்துறை சார்பில் மானியத்துடன், பசுமைக்குடில், இயற்கை வேளாண்மை உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்கள் குறித்த ஆய்வு நேற்று முன் தினம் அன்னூரில் நடந்தது. கோவை வேளாண் இணை இயக்குனர் நடராஜன், அல்லப்பாளையத்தில் உள்ள நிலக்கடலை விதைப்பண்ணையை ஆய்வு செய்தார். ஊத்துப்பாளையத்தில் உள்ள எருக்கன்குளம் ஏரி மேம்பாடு பணிகளை பார்வையிட்டார். விவசாயத்தில் வானிலை சார்ந்த பயிர் காப்பீடு திட்டம் குறித்தும், மழை குறைவால் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அதிகாரிகளுக்கு

அறிவுரை வழங்கினார். ஆய்வில் இணை இயக்குனர் நடராஜன் விவசாயிகளிடம் பேசுகையில்,"வாய்ப்புள்ள அனைத்து பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனம் அமைக்க வேண்டும். விவசாயிகள் ஒன்றிணைந்து சங்கம் அமைத்து விளைபொருட்களை பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்து அதிக விலை வரும்போது விற்கலாம். அரசு மானியத்துடன் வழங்கும் பண்ணைக்கருவிகளை பயன்படுத் திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் விவசாயத்தில் அதிக லாபம் பெற முடியும்' என்றார். ஆய்வில் வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார், வேளாண் அலுவலர் சீனிராஜ், உதவி வேளாண் அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

**கடைபோக சாகுபடிக்கு தயார் தோட்டக்கலைத் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,03:41 IST

ஊட்டி: விவசாயத் தோட்டங்களில், கடைபோக பயிர் சாகுபடிக்காக நிலத்தை தயார் செய்யும் வழிமுறை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. ஊட்டி உழவர் பயிற்சி நிலைய தோட்டக்கலை உதவி இயக்குனர் குணசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடைபோக பயிருக்கு நிலம் தயார் செய்து, ஒரு ஏக்கருக்கு 12 டன் தொழு உரம் இட்டு, 15 செ.மீ., உயரம், ஒரு மீட்டர் அகலமுள்ள மேட்டுப்பாத்திகள் அமைக்க வேண்டும். ஏக்கருக்கு, 54:54:54 தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மற்றும் 10 கிலோ துத்தநாக சல்பேட் அடி உரமாக இட வேண்டும். 5 கிலோ அசோஸ்பைரில்லம், 5 கிலோ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரத்தை, 25 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். ஏக்கருக்கு 1.6 கிலோ காரட் விதை தேவைப்படும் வரிசைக்கு, 15 செ.மீ., இடைவெளியில் விதைக்க வேண்டும். 14 கிலோ கார்போபியூரான் குருணை மருந்தை இட வேண்டும். நூற்புழுவை கட்டுப்படுத்த, ஒரு ஏக்கருக்கு 400 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடலாம். விதைத்த 14 நாட்களில் முதல் களை எடுக்க வேண்டும்; 45வது நாளில் 5 செ.மீ., இடைவெளியில் களைந்து, 60வது நாள் மண் அணைக்க வேண்டும். 60வது நாளில் 18:18:18 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்களை மேலுரமாக இட வேண்டும். களைகளை கட்டுப்படுத்த, ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 மி., ஸ்டாம்ப் அல்லது 4 மி., பூளு குளோரிலின் கலந்து, விதைத்தவுடன் தெளிக்க வேண்டும். களைகளை 2.3. செ.மீ., உயரம் வளர்ந்த பின் 0.5 சென்கார், ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். இவ்வாறு, குணசேகரன் கூறியுள்ளார்.

**வெங்காய விலை கடும் சரிவு; திண்டுக்கல் வியாபாரிகள் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,00:20 IST

திண்டுக்கல்: திண்டுக்கல் மார்க்கெட்டிலிருந்து மலேசியாவிற்கு வெங்காய ஏற்றுமதி நிறுத்தப்பட்டதால் விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் வெங்காய மார்க்கெட்

திங்கள், புதன், வெள்ளி ஆகிய 3 நாட்கள் செயல்படும்.திண்டுக்கல் அருகேயுள்ள குஜிலியம்பாறை, எரியோடு, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் ஆகிய பகுதிகளில் இருந்தும், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டையில் இருந்தும் சின்ன வெங்காயத்தை விவசாயிகள் இங்கு விற்பனைக்கு கொண்டு வருவர். இங்கிருந்து இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். திண்டுக்கல் வெங்காய மண்டிக்கு கடந்த வாரம் 3 ஆயிரம் மூடை வரை மட்டுமே வரத்து இருந்தது. சிங்கப்பூர், மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த வாரம் கிலோ 14 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில் திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு நேற்று மட்டும் 7 ஆயிரம் மூடை வெங்காயம் வந்தது. மலேசியாவிலுள்ள மார்க்கெட்டிற்கு உள்ளூர் வெங்காயம் வரத்துள்ளதால் இங்கிருந்து வெங்காயம் அனுப்பப்படவில்லை. வரத்து அதிகரிப்பால் வெங்காய விலையில் கடும் சரிவு ஏற்பட்டது. ஒரு கிலோ வெங்காயம்(மொத்த விற்பனை) 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரை விற்கப்பட்டது. வெங்காய மண்டி உரிமையாளர் ராஜேந்திரன் கூறியதாவது: திண்டுக்கல் மண்டியில் வெங்காயம் தேக்கம் அடைந்துள்ளதால் கிலோ 5 ரூபாய் முதல் 10 வரைக்கும் மட்டுமே விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடும் பாதிப்பில் உள்ளனர். நல்ல விளைந்தும் விலை கிடைக்காத நிலை உள்ளது. மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இருந்தால் தான் கூடுதல் விலை கிடைக்கும் என்றார்.

**விவசாயிகள் சங்க பவள விழா பொதுக்கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,01:35 IST

சேத்தூர்: அகில இந்திய விவசாயிகள் சங்கப் பவள விழா பொதுக்கூட்டம் சேத்தூரில் நடந்தது. மாவட்ட செயலாளர் விஜயமுருகன் தலைமை வகித்தார். தாலுகா செயலாளர் நீராத்திலிங்கம் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் குருசாமி வரவேற்றார். அகில இந்திய பொதுச் செயலாளர் வரதராஜன், விவசாயிகளின் தற்போதைய நிலை, அரசின் செயல்பாடுகள் குறித்து பேசினார். விவசாயிகளின் குறைகள் குறித்து மாநில துணைத் தலைவர்கள் சந்திரா, முகமது அலி, பொதுச் செயலாளர் சண்முகம் பேசினர். விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் அர்ஜுனன், மாவட்ட பொருளாளர் நேரு, மாநில குழு உறுப்பினர் மங்கையர்கரசி மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், உறுப்பினர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். தாலுகா தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.

**வேளாண் திட்டத்தை பயன்படுத்த இணை இயக்குனர் அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2010,03:18 IST

திருப்பூர்:""வேளாண் திட்டங்களை பயன்படுத்த, வட்டார வேளாண் அலுவலகங்களை விவசாயிகள் அணுகலாம்," என நேற்று பதவியேற்ற வேளாண் இணை இயக்குனர் முத்துசாமி தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனராக முத்துசாமி நேற்று பதவி ஏற்றார். இதற்கு முன் இவர், விருதுநகரில் தோட்டக்கலை துணை இயக்குனராக பணியாற்றினார். பதவி உயர்வு பெற்று, திருப்பூருக்கு வந்துள்ளார். இதுநாள் வரை கோவை வேளாண் துணை இயக்குனர் சங்கரராஜ், திருப்பூரில் இணை இயக்குனராக கூடுதல் பொறுப்பு வகித்து வந்தார். இவர், புதிய இயக்குனரிடம் நேற்று பொறுப்புகளை ஒப்படைத்தார்.

இணை இயக்குனர் முத்துசாமி கூறுகையில், ""பயிர் சாகுபடி திட்டம், சான்று விதைகள் வினியோக திட்டம், தேசிய வேளாண் காப்பீடு திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், விதை கிராம திட்டம், மத்திய அரசு சார்ந்த திட்டம் என விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்தந்த வட்டார வேளாண் அலுவலகங்களுக்கு சென்று விவசாயிகள் பயனடையலாம். மாவட்டத்தில் உள்ள காலி பணியிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

இதேபோல், திருப்பூர் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குனராக பதவி வகித்து வந்த சந்தான கிருஷ்ணன், வேளாண் துறை துணை இயக்குனராக நேற்று பொறுப்பேற்றார்.

தினத் தந்தி

***வெளிநாடுகளில் தேவை உயர்ந்து வருவதால் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 15 சதவீதம் அதிகரிக்க வாய்ப்பு***



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

வெளிநாடுகளில் தேவை உயர்ந்து வருவதால், நடப்பு நிதி ஆண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 10 முதல் 15 சதவீதம் அதிகரிக்கும் என இந்திய நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாளர்கள் பேரவை தெரிவித்துள்ளது.

7 சதவீதம் அதிகம்

சென்ற நிதி ஆண்டில் நம் நாட்டிலிருந்து 5.03 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது, முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 7 சதவீதம் அதிகமாகும். அவ்வாண்டில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 4.71 லட்சம் டன்னாக இருந்தது.

வெளிநாடுகளில் இந்திய மிளகாய் மற்றும் மஞ்சள் போன்ற பல்வேறு பொருள்களுக்கு தேவைப்பாடு உயர்ந்து வரும் நிலையில் நடப்பாண்டில் ஏற்றுமதி சிறப்பான அளவில் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நறுமணப் பொருள்கள் வாரியம் பல்வேறு வகையான நறுமணப் பொருள்கள் உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாரியத்தின் மேம்பாட்டுத் திட்டங்களால் அடுத்த 15 ஆண்டுகளில் நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 1,000 கோடி டாலர் (சுமார் ரூ.50,000 கோடி) மதிப்பிற்கு உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1.48 லட்சம் டன்

நடப்பாண்டில், ஏப்ரல்– ஜூன் மாத காலத்தில், அளவின் அடிப்படையில் 1.48 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ஆகியுள்ளன. இதன் மதிப்பு ரூ.1,534 கோடியாகும். சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.1,293 கோடிக்கு 1.27 லட்சம் டன் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் மிளகாய், இஞ்சி, பெருஞ்சீரகம், வெந்தயம், வெள்ளைப் பூண்டு, புளி, பெருங்காயம் உள்ளிட்ட பல்வேறு பொருள்களின் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. சில மதிப்புக் கூட்டப்பட்ட நறுமணத் தயாரிப்புகளின் ஏற்றுமதியும் நன்கு உயர்ந்துள்ளது. எனினும் சிறிய வகை ஏலம் மற்றும் மஞ்சள் போன்ற சில பொருள்களின் ஏற்றுமதி மதிப்பின் அடிப்படையில் மட்டுமே வளர்ச்சி கண்டுள்ளது.

மிளகு

ஏப்ரல்–ஜூன் மாத காலத்தில் மிளகு ஏற்றுமதி மட்டும் அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் சற்று சரிவினைக் கண்டுள்ளது. உலக அளவில், வியட்நாம், இந்தோனேஷியா, பிரேசில், இந்தியா ஆகிய நாடுகள் மிளகு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கின்றன. இந்த நாடுகளில் நடப்பு ஆண்டில் மிளகு உற்பத்தி சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் சென்ற ஆண்டில் 50,000 டன் மிளகு உற்பத்தியானது. நடப்பு ஆண்டில் இந்த அளவைக் காட்டிலும் உற்பத்தி குறையும் என்று கூறப்படுகிறது.

**மத்திய அரசு, 2 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மத்திய அரசு, 1.50–2 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளித்துள்ளது.

மூலச் சர்க்கரை

உள்நாட்டில், சர்க்கரை உற்பத்தி குறைந்ததையடுத்து, பல சர்க்கரை ஆலைகள் மூலச் சர்க்கரையை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொண்டன. அதற்கு சமமான சர்க்கரையை ஏற்றுமதி செய்யும் வகையில் சர்க்கரை ஆலைகளுக்கு இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.

இருப்பினும், துறைமுகங்களுக்கு சர்க்கரையை எடுத்துச் செல்வதற்கு ரயில்வே வேகன்கள் போதிய அளவிற்கு இல்லாததால், இந்நிறுவனங்கள் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் உள்ளதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

உள்நாட்டில், பணவீக்க விகிதம் அதிகரித்ததையடுத்தும், போதிய அளவிற்கு உற்பத்தி இல்லாததாலும், மத்திய அரசு சர்க்கரை மற்றும் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இந்த தடை குறைந்த கால அடிப்படையில் நீடிக்கும் என பவார் மேலும் கூறினார்.

எனினும், அண்மையில் பாகிஸ்தானுக்கு 3.20 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்தி

சென்றபருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) சர்க்கரை உற்பத்தி குறைந்ததையடுத்து, உள்நாட்டில் இதன் விலை படிப்படியாக அதிகரித்தது. இதனை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சென்ற சர்க்கரை பருவத்தில், நம் நாடு 1.88 கோடி டன் சர்க்கரையை உற்பத்தி செய்தது.

நடப்பு சர்க்கரை பருவத்தில், நாட்டின் பல பாகங்களில் கரும்பு உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, இவ்வாண்டில் 2.50 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக அளவில், சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடம் வகிக்கிறது. பயன்பாட்டில் முதலிடத்தில் உள்ளது.

**உள்நாட்டில் தேவை அதிகரித்து வரும் நிலையில் சர்வதேச அளவில் உரங்கள் விலை மீண்டும் உயருகிறது**

பிரபா ஜெகன்னாதன்

புதுடெல்லி

உள்நாட்டில் தேவை அதிகரித்து வரும் நிலையில் சர்வதேச அளவில் பல்வேறு உரங்களின் விலை மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது.

யூரியா

சென்ற ஜூலை மாதத்தின் பிற்பகுதியில், உலக சந்தையில் யூரியா, டீ.ஏ.பி., பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் ஆகிய முக்கிய உரங்களின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இது, விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டிருக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு கவலையளிப்பதாக உள்ளது. உலக அளவில், உரங்கள் இறக்குமதியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், சர்வதேச அளவில் உரங்கள் விலை அதிகரித்தபோது, நம் நாட்டின் உர மானிய சுமை சுமார் ரூ.1 லட்சம் கோடியாக உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் நம் நாட்டில் உரங்களுக்கான தேவைப்பாடு 5 சதவீதம் உயர்ந்து 5.60 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதி ஆண்டில் 5.34 கோடி டன்னாக இருந்தது.

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் நம் நாடு 50 லட்சம் டன்னுக்கும் அதிகமான அளவில் உரங்களை இறக்குமதி செய்துள்ளது. இதன் மதிப்பு 120 கோடி டாலராகும் (சுமார் ரூ.5,600 கோடி). அதற்கு முந்தைய நிதி ஆண்டில் 240 கோடி டாலர் மதிப்பில் 57 லட்சம் டன் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

ஜூலை மாதத்தில், 16 முதல் 29–ந் தேதி வரையிலான இரண்டு வாரங்களில், பாஸ்பேட் உரம் மட்டும் டன் ஒன்றுக்கு 22 டாலர் (சுமார் ரூ.1,000) உயர்ந்து 533 டாலராக (ரூ.24,500) அதிகரித்துள்ளது. இறக்குமதியாகும் டீ.ஏ.பி. உரத்தின் விலை டன் ஒன்றுக்கு 20 டாலர் அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒரு டன் யூரியாவின் விலை 10 டாலர் அதிகரித்து 280 டாலராக உயர்ந்துள்ளது. இது, ஜூன் மாத தொடக்கத்தில் 270 டாலராக இருந்தது.

பொட்டாஷ்

பொட்டாஷ் உரத்தின் விலை மட்டும் குறைந்தபட்சமாக 4–5 டாலர் மட்டும் உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் தற்போது ஒரு டன் பொட்டாஷ் உரத்தின் விலை சுமார் 370 டாலராக

உள்ளது. உலக அளவில் இதற்கான தேவை 5.50 கோடி டன்னாக உள்ளது. எனினும் உற்பத்தி 6 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதால், இந்த உரத்தின் விலை மட்டும் ஓரளவு கட்டுக்குள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## "உணவுப்பொருள் கெட்டுப்போன தகவல் மிகைப்படுத்தப்பட்டு உள்ளது'' ரூ.7 கோடி உணவுப்பொருள்தான் கெட்டுப்போனது சரத்பவார் தகவல்

புதுடெல்லி, ஆக.14–

"இந்திய உணவு கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட ரூ.7 கோடி உணவுப்பொருள்தான் கெட்டுப்போனது. இந்த தகவல் மிகைப்படுத்தப்பட்டு உள்ளது'' என்று, மந்திரி சரத்பவார் கூறினார்.

டெல்லி மேல்–சபையில், உணவுத்துறை மந்திரி சரத்பவார் பேசியதாவது:–

ரூ.7 கோடி உணவுதான் கெட்டு போனது

இந்திய உணவு கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, திறந்த வெளி கிடங்குகளில் பாதுகாக்கப்பட்டு வந்த மிக அதிகமான உணவுப்பொருள் கெட்டுப்போய் விட்டதாக தகவல்கள் வெளியானது. இந்த தகவல் மிகைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

சில இடங்களில் உள்ள கிடங்குகளில் இருந்த உணவுப்பொருள் கெட்டுப்போய் இருக்கிறது. இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

அரசு கிடங்குகளில், மொத்தத்தில் 11,700 டன் உணவுப்பொருள்தான் கெட்டுப்போய் இருக்கிறது. இதன் மதிப்பு ரூ.6.86 கோடி.

புதிய கிடங்குகள்

இனி வரும் ஆண்டுகளில் உணவு கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும் 149.4 லட்சம் டன் உணவுப்பொருளை பாதுகாக்க புதிய கிடங்குகள் கட்ட உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனியார் டெண்டர் மூலம் ஒரு ஆண்டுக்குள் இந்த கிடங்குகள் கட்டி முடிக்கப்படும். ரெயில்வே துறைக்கு சொந்தமான இடங்களில் கட்டப்படும் கிடங்குகள் 2 ஆண்டுகளில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்திய உணவு கழகத்தின் கையிருப்பு ஜூலை 1–ந் தேதி கணக்குபடி 310.90 லட்சம் டன் இருக்க வேண்டும். ஆனால் இந்த மாதத்தில் கையிருப்பு 570.80 லட்சம் டன் கையிருப்பு இருக்கிறது. கூடுதலாக கையிருப்பில் இருக்கும் உணவுப்பொருளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு சரத்பவார் கூறினார்.

பாரதீய ஜனதா தாக்கு

சரத்பவாரின் இந்த பேச்சுக்கு பாரதீய ஜனதா கண்டனம் தெரிவித்து இருக்கிறது. இது குறித்து அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் ராஜீவ் பிரதாப் ரூடி கூறியதாவது:–

உணவுப்பொருள் சேதம் அடைந்த தகவலை மிகைப்படுத்திவிட்டதாக சரத்பவார் கூறுகிறார். இது நகைப்புக்குரிய பேச்சாகும். இந்த சம்பவத்தை மறுக்கும் விதத்தில் தான் அவர் செயல்படுகிறாரே தவிர, இதை ஏற்றுக்கொண்டு விளக்கம் கொடுக்கும் நிலையில் அவர் இல்லை. இந்த நாட்டு மக்களையும், மேல்–சபை உறுப்பினர்களையும் அவர் முட்டாளாக்க முயற்சிக்கிறார். அவரது பேச்சு மேல்–சபையை அவமதிக்கும் செயல்.

உணவுப்பொருள் கெட்டுப்போன பிரச்சினை பற்றி சுப்ரீம் கோர்ட்டு கூட கருத்து தெரிவித்து இருக்கிறது. பல எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் பேசி இருக்கிறார்கள். ஆனால் இதை சரத்பவார் மூடி மறைக்க முயற்சிக்கிறார்.

இவ்வாறு ராஜீவ் பிரதாப் ரூடி கூறினார்.

பிருந்தா கரத்

இது பற்றி மார்க்சிஸ்ட் மேல்–சபை உறுப்பினர் பிருந்தா கரத் கூறியதாவது:–

இனி வரும் காலங்களில் உணவுப்பொருள் கெட்டுப்போகாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் அரசு யோசிக்க வேண்டும். இதை விட்டு விட்டு, நடந்த சம்பவத்தை மறைக்க முயலுவது தேவையற்றது.

உணவுப்பொருள் பணவீக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதை கட்டுப்படுத்த இந்த அரசு என்ன முயற்சி எடுக்க போகிறது? சாதாரண மக்கள் பற்றி இந்த அரசுக்கு கவலை இல்லை

இவ்வாறு பிருந்தா கரத் கூறினார்.